www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 040

23 செப்டம்பர் 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# ‘கே.பி எதை விரும்புகின்றாரோ அதுதான் முக்கியம்’

## நரிகேசி உருத்திரகுமாரன் அறிவிப்பு! திடுக்கிடும் ஒலிப்பதிவு அம்பலம்!



கே.பியின் நெறிப்படுத்தலில், சிங்கள அரசின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நரிகேசி உருத்திரகுமாரன் இயங்கி வருவதை உறுதி செய்யும் திடுக்கிடும் புதிய ஒலிப்பதிவு கறுப்பிற்கு கிடைக்கப் பெற்றுள்ளது. உருத்திரகுமாரன் தனது நண்பர் என்றும், அவருடன் தான் தொடர்பில் இருப்பதாகவும் கடந்த மாதம் கே.பி அறிவித்திருந்த நிலையில், உருத்திரகுமாரனின் தொலைபேசி உரையாடல்கள் எமது ஊடகப் புலனாய்வாளர்களின் கண்காணிப்பிற்கு உட்படுத்தப் பட்டிருந்தன. இந்நிலையில் ‘தமிழீழம் சாத்தியமில்லை என்றும், இது தொடர்பாக மக்களுக்கு விளக்கமில்லை’ என்றும் கே.பியின் நிதிப்பொறுப்பாளரான பே.இன்பநாயகத்துடன் நரிகேசி உருத்திரகுமாரன் தொலைபேசியில் உரையாடிய பொழுது எமது ஊடகப் புலனாய்வாளர்களால் பதிவு செய்யப்பட்ட ஒலிப்பதிவு வடிவத்தை நாம் வெளிக்கொணர்ந்ததை தொடர்ந்து, தனது வழமையான தொலைபேசியில் உரையாடுவதை தவிர்த்துக் கொண்ட உருத்திரகுமாரன், பிறிதொரு தொலைபேசி ஊடாக தனது சகபாடிகளுடன் உரையாடி வந்திருந்தார்.

எனினும் இதனையும் கண்டறிந்த எமது ஊடகப் புலனாய்வாளர்கள், அண்மையில் கே.பியுடன் நரிகேசி உருத்திரகுமாரன் உரையாடியமை தொடர்பான தகவலை எம்மிடம் தெரிவித்ததை அடுத்து, அதனை எமது கடந்த இதழில் வெளிக்கொணர்ந்திருந்தோம். இருந்த பொழுதும் இது தொடர்பான ஒலிப்பதிவு வடிவத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில், நரிகேசி உருத்திரகுமாரனின் தொலைபேசி உரையாடல்களை நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி இறுக்கமான கண்காணிப்பிற்கு உட்படுத்திய எமது ஊடகப் புலனாய்வாளர்கள், இலண்டனில் உள்ள தனது பாதுகாப்புச் செயலர் தயாபரனுடன் இவ்வாரம் தொலைபேசியில் உருத்திரகுமாரன் உரையாடிய பொழுது பதிவு செய்யப்பட்ட ஒலிவடிவத்தை எமது ஆசிரியர் பீடத்திடம் கையளித்துள்ளனர்.

இதன்பொழுது நரிகேசி உருத்திரகுமாரனுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் தயாபரன், தன்னுடன் தொலைபேசியில் கே.பி கதைத்ததாகவும், அவரது கோரிக்கையை ஏற்று ஒக்ரோபர் மாதம் 1ஆம் நாளில் இருந்து தான் நிதிசேகரிப்பை தொடங்கப் போவதாகவும் கூறுகின்றார்.

இதனை வரவேற்கும் நரிகேசி உருத்திரகுமாரன், கே.பியின் விருப்பம் எதுவோ, அதனை நிறைவேற்றுவதே தனது அவா என்றும், இதற்கு ஏதுவாக இலண்டனில் உள்ள தனது ஏனைய சகபாடிகளை தயாபரனுடன் தொடர்புபடுத்தி விடுவதாகவும் உறுதியளிக்கின்றார். அமெரிக்காவில் நிதிசேகரிப்பது பிரச்சினையில்லை என்றும், ஐரோப்பாவில் அதிக அளவில் தமிழீழ தேசிய உணர்வாளர்கள் வசிக்கும் நிலையில் அங்கு நிதி சேகரிப்பது கடினமாக இருக்கலாம் என்றும், தயாபரனிடம் நரிகேசி உருத்திரகுமாரன் கூறுகின்றார்.

எனினும் ஐரோப்பாவிலும், இலங்கையிலும் தமக்குப் பலம் இருப்பதாகவும் பதிலளிக்கும் தயாபரன், கே.பியின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் திடசங்கற்பம் பூணுகின்றார். தேர்தல் கட்டணம் என்ற போர்வையில் மக்களிடம் இருந்து பெரும் தொகையான பணத்தை நாடுகடந்த கும்பல் சூறையாடியிருக்கும் நிலையில், இதுவரை மக்களிடம் இருந்து பணம் எதனையும் தாங்கள் சேகரிக்கவில்லை என்றும், கடன்பட்டே அண்மையில் இலண்டனில் நிகழ்வு ஒன்றை தான் நடத்தியதாகவும் தயாபரன் கூறுகின்றார்.

இதனை எக்காளமிட்டு ஆமோதிக்கும் நரிகேசி உருத்திரகுமாரன், நிதி சேகரிப்பது என்பது தனியொரு மனிதனால் செய்யக்கூடிய வேலை அல்ல என்றும், அதனை பலருடன் இணைந்தே செயற்படுத்த வேண்டும் என்றும் ஆலோசனை அளிக்கின்றார்.

அத்துடன் இது தொடர்பாக கே.பியிற்கு தான் ஒரு மின்னஞ்சலை அனுப்பி வைப்பதாகவும், தன்னுடனும், கே.பியுடனும் தொடர்பில் இருக்குமாறும் தயாபரனுக்கு நரிகேசி உருத்திரகுமாரன் கூறுகின்றார்.

இத்துடன் உலகத் தமிழ் உறவுகளின் கவனத்திற்காக நரிகேசி உருத்திரகுமாரனுக்கும், தயாபரனுக்கும் இடையில் நடைபெற்ற தொலைபேசி உரையாடலின் ஒலிவடிவத்தை இணைத்துள்ளோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தனத்தின் பெயரில் பல்பொருள் அங்காடி! புதிய தகவல்கள் கசிவு!

சிங்கள-இந்திய அரசுகளின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இயங்கும் காகிதப்புலிகளின் தலைவர் இராமு .சுபனை தனது தேசியத் தலைவராகக் கொண்டியங்கி வரும் காகிதப்புலித் தொழிலதிபர் தனத்தின் பெயரில் பல்பொருள் அங்காடி ஒன்று இயங்கி வருவதாக கறுப்பிற்கு நம்பகமான மின்னஞ்சல் ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டின் இறுதியில் பெருங்குடிமகன் சர்வேயின் ஆலோசனைக்கு அமைய இலண்டனுக்கு வெளியே தனது பினாமி ஒருவர் ஊடாக சொத்துக்களை கொள்வனவு செய்த தனம், பின்னர் 2005ஆம் ஆண்டு இவற்றை விற்பனை செய்து, இவற்றின் ஊடாகக் கிடைத்த இலாபத்தைப் பயன்படுத்தி 2006ஆம் ஆண்டு இலண்டனில் பல்பொருள் அங்காடி ஒன்றைத் திறந்ததாக இம்மின்னஞ்சலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, 2006ஆம் ஆண்டு லிவர்பூல் பகுதியில் வசிக்கும் தமிழீழ தேசிய உணர்வாளர் ஒருவரிடம் 1 இலட்சம் பவுண்களை கடனாகப் பெற்றுக் கொண்ட தனம், தற்பொழுது அதனை மீளளிக்க மறுத்து வருவதோடு, அதனை ரி.ரி.என் தொலைக்காட்சியின் கணக்கில் தான் வைப்பிலிட்டதாகவும், 2007ஆம் ஆண்டு ரி.ரி.என் தொலைக்காட்சிக்கு பிரான்ஸ் அரசு தடை விதித்ததால், அந்தப் பணத்தை தன்னால் மீளப்பெற முடியவில்லை என்று கூறிக் கைவிரிப்பதாகவும் புதிய தகவல் ஒன்று எமது ஊடகப் புலனாய்வாளர்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

தனத்திடம் கடனாகப் பணம்



கொடுப்பவர்களே, கவனமாக இருங்கள். உங்கள் பணம் தனத்தின் கைகளில் சிக்கினால் உங்களுக்கு திருப்பதி வெங்கடாசலபதியின் திருநாமம்தான் மிஞ்சும்!

# மனம்திருந்தும் செயற்பாட்டாளர்கள்!

காகிதப்புலிகளின் சுயரூபத்தை நாம் அம்பலப்படுத்தி வரும் நிலையில், உண்மை நிலையைப் புரிந்து கொண்டு சரியான பாதைக்கு தமிழீழ தேசிய செயற்பாட்டாளர்கள் சிலர் திரும்பி வந்துள்ளனர்.

இதில் குறிப்பாக பிரித்தானியாவில் தனத்தின் தண்டாயுதபாணியாக விளங்கிய ஒருவர் தனது தவறை உணர்ந்து கறுப்பிற்கு பல உண்மைகளை ஒப்புவித்துள்ளார்.

சனநாயகம் என்ற போர்வையில் பிரித்தானியாவில் தனம் பெரும் குழப்பங்களை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவிக்கும் இவர், இராமு.சுபனுடனும் தான் பல தடவைகள் உரையாடியதாகவும், கே.பியை நியாயப்படுத்துவதிலேயே இராமு.சுபன் கவனம் செலுத்துவதாகவும் கூறுகின்றார்.

இதேபோன்று சுவிசில் உள்ள மற்றுமொரு தமிழீழ தேசிய செயற்பாட்டாளர், காகிதப்புலிகளின் சுயரூபத்தை உணர்ந்து சரியான பாதையில் பயணிப்பதற்கு முன்வந்துள்ளார்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்